# அறிவித்தல்

## காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

## இணைந்த சேவையின் சாரதி சேவையில் தரம் 111 இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்

1.0 காணி பயன்பாட்டு உபயோகத் திட்டமிடல் திணைக்களத்தில் நிலவுகின்ற சாரதி சேவையில் தரம் 111 இன் பதவிகளில் உள்ள வெற்றிடங்களின் பொருட்டு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 தொழில்சார் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக, திறமையின் அடிப்படையில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளை, நிலவுகின்ற வெற்றிடங்களின் பொருட்டு நியமனம் செய்யப்படும்.

3.0 காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை 8.0 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படும் திகதி நியமனம் அதிகாரியால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதுவிடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரமுள்ளது.

4.0 சம்பளம் :- 03/2016 ஆம் இலக்க மற்றும் 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 1 இன்படி, சாரதி III, II, I மற்றும் விசேட தரங்களுக்கு ஏற்புடையதான மாதச் சம்பள அளவுத் திட்டம் PL 3-2016 ரூபா. 25,790/- 10x270/- 10x300/- 10x330/- 12X350/- ரூபா. 38,990/= ஆவதுடன், அந்த சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும். மேற்படி சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியமனம் நடைமுறைப்படும் திகதி தொடக்கம் சம்பளம் செலுத்தபப்டும்.

5.0 இப் பதிவி நிரந்தரமுடையதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். உங்களுக்குரிய ஓய்வூதிய சமப்ள முறை தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற கொள்கையுடனான தீர்மானத்திற்கு இணங்கியொழுகுதல் வேண்டும். மேலும் நீங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கும்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கும் உதவு தொகை செலுத்தப்படுதல் வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் முறையின்படி தங்களால் அதற்கு உதவு தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

6.0 எல்லா அலுவலர்களும் இடமாற்றங்களுக்கு உட்படுவதுடன், தெரிவு செய்யப்படுகின்ற அலுவலர்கள் நாட்டில் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். **முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.** எவ்வாறாயினும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கின்ற ஏதேனும் மிகவிசேடமான காரணங்களின்மீது அந்தக் காலம் முடிவடைவதற்கு

முன்னர் எவரேனும் அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு தேவையாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

7.0 தகைமைகள்:- சாரதி சேவையில் தரம் iii இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

(அ). இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ). விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியம் உரித்துடையவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

(இ). நல்லொழுக்கத்துடனும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஈ). கல்வித் தகைமைகள்:

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/தமிழ் மொழி அடங்கலாக இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் லேண்டும்.

(உ). தொழில்சார் தகைமைகள்**:-**

(i). தனியார் அல்லது வாடகை வாகனங்கள் மற்றும் வெற்று எடை 24 அந்தருக்கு குறைவான ஸ்ரேசன் வெகன் வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

(ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தினத்திற்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் சீ மற்றும் சீ 1 வாகன வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கமைய பி வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்).

(ii). பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) அனுபவம்:-

வாகன சாரதி ஒருவராக மூன்று (03) வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அனுபவத்தினை சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.)

(எ) உடற்றகைமைகள் :

ஆகக்குறைந்தது உயரம் 05 அடி இருத்தல் வேண்டும் .

பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் சேவையில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டுமென்பதுடன், நல்ல கண் பார்வை இருத்தல் வேண்டும். அரசாங்க வைத்தியரால்

மேற்கொண்ட முறையான சான்றிதழ்மூலம் அது தொடர்பாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஏ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் v ஆவது அத்தியாயம் படி அரசாங்க சேவைக்கு நியமனம் செய்வதற்கு தகமையற்றவராக இருத்தலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பத்தாரியும் பதவிக்கு ஏற்புடையதான எல்லா தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னராக பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

8.0 விண்ணப்பங்கள் கோருதல்:-

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

| அமைச்சு | திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | காணி பயன்பாட்டு திட்டமிடல் திணைக்களம் | சாரதி | 05 |

9.0 தொழில்சார் நேர்முகப் பரீட்சை:-

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் விண்ணப்பத்தாரிகளின் அடிப்படை தகைமைகளை பரிசோதிப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியிலயே, நடாத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் விண்ணப்பத்தாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு முறையினை கட்டாயமாக பின்பற்றி, தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பத்தாரிகளை இணைந்த சாரதிகள் சேவையின் தரம் iii இற்கு நியமனம் செய்யப்படும். விண்ணப்பத்தாரிகள் நேர்முகப் பரீட்சையில் தோன்றுவதற்கு விருப்பமுள்ள மொழி மூலத்தை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டுமென்பதுடன், கட்டமைவு முறையிலான நேர்முகப் பரீட்சை அந்த மொழிமூலத்திலயே நடைபெறும்.

தொழில்சார் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் பின்வருமாறாகும்:-

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|
| (i) வாகனம் ஓட்டும் திறன் | 40 | 20 |
| (ii) பெருந்தெருக்கள் சட்டங்கள் தொடர்பான | 40 | 20 |

| | | |
|---|---|---|
| நடைமுறை அறிவு | | |
| (iii)மோட்டார் இயந்திரவியல் தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 10 |

குறிப்பு:- பதவிக்கு ஏற்புடையதாக பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளியக செயற்பாடுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியுமான சான்றிதழ்கள்மூலம் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அந்த தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

10.0 விண்ணப்பபடிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்கப்படுதல் வேண்டும். தகைமைகளை பரிசீலனை செய்யும்போது எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என அறிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பத்தாரிகளால் சமர்ப்பிக்கப்படும் தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொய்யானதென அறியவந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11.1 உரிய மாதிரி படிவத்தின் பிரகாரம் விண்ணப்பபடிவம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கு ஒழுங்கமையாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யாத பூரணமற்ற நிலையில் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்களை பூர்த்தி செய்யாததன் காரணமாக ஏற்படும் நட்டத்தை விண்ணப்பத்தாரியால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

11.2 விண்ணப்பங்கள் வைத்து அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "**சாரதி சேவையில் தரம் 111 இன் பதவிக்கு ஆட்சேர்ப்புச் சேய்தல்"** என்று குறிப்பிடுக.

11.3 விண்ணப்பத்தில் விண்ணபத்தாரியின் கையொப்பம்:- அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலரொருவர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர் அல்லது அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம்06/2006 தரப்படுத்தலின் படி, சிரேஷ்ட மட்டத்தில் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவாரால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

11.4 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

பூர்த்தி செய்த விண்ணப்பபடிவங்களை 2018.09.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்ககூடியதாக பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,
இலக்கம் 31,
பதிபா வீதி,
கொழும்பு 05.

12.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்துள்ளார் என்ற முன் தீர்மானத்திற்கு அமைவாக உரிய திகதியில் அல்லது அன்றைய திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணபத்தாரிகளையும், பணிப்பாளர் நாயகத்தால் நேர்முகப் பரீட்சைக்கும், தொழில்சார் பரீட்சைக்கும் அழைக்கப்படுவார்கள். ஆயினும் அவ்வாறு அழைத்தலானது, விண்ணபத்தாரி இப்பதவிக்கு தகைமை பெற்றுள்ளார் என்பதற்கு ஏற்றுக்கொள்ளுதலாக கருதப்படமாட்டாது. விண்ணபத்தாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் உள்ளதா என பரிசோதிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென அறிய வருமாயின் அவர்களது பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

13.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் கடித ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

i ஆட்பதிவுத் திணைக்களம்மூலம் வழங்கப்படும் செல்லுபடியான தேசிய அடையாள அட்டை.

ii செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு

iii. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

14.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். எல்லா விண்ணபத்தாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களின்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளை படி,

ஏ.எஸ்.இலங்கமகே
பணிப்பாளர் நாயகம்
காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

2018 ஆகஸ்ட் மாதம் 30 ஆந் திகதி,
காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
நாராஹேன்பிட்டிய
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

# சாரதி சேவையில் தரம் 111 இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

அலுவலக உபயோகத்திற்காக

| |
|---|
| |

விண்ணப்பிக்கும் மொழிமூலம்

சிங்களம் - 1

தமிழ் - 2

ஆங்கிலம் - 3

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................
   (சிங்களம்/தமிழ்)
   Name with Initials (English Block Letters) :-...............................................................

2. முழுப் பெயர்:-..........................................................................................................
   ..........................................................................................................

3. தேசிய அடையாள அட்டையின் இலக்கம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. நிரந்தர முகவரி: - .....................................................................................................
   .....................................................................................................

5. பால் (பெண்/ஆண்): பெண் – 1 ஆண் - 0

6. உயரம்:- அடி:-………………….. அங்குளம்:-……………………

7. பிறந்த திகதி ஆண்டு : மாதம் : திகதி

7.1 விண்ணப்பம் பெறுப்பேற்கப்படும் இறுதி திகதியில் வயது:-

ஆண்டு மாதம் திகதி

8. தொலைபேசி இலக்கம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. சாரதி அனுமதிப் பத்திர இலக்கம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட திகதி:-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

11 சாரதி அனுமதிப்பத்திரம் காலவதியாகும் திகதி:-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

12. செல்லுபடியாகும் வாகன வகுப்பு:- ………………………………………………..

13. கல்வித் தகைமைகள்:

13.1 க.பொ.த.(சா.த)

முதலாவது அமர்வின் பெறுபேறுகள்

பரீட்சை இலக்கம் : ஆண்டு ………………. மாதம் …………………

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

இரண்டாவது அமர்வின் பெறுபேறுகள்

பரீட்சை இலக்கம் : ஆண்டு .................. மாதம் ....................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

14. ஏனைய தகைமைகள்:-

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

15. பதவிகளுக்கு ஏற்புடையதாக பெற்றுள்ள அனுபவம் :

| நிறுவனம் | காலம் |
|---|---|
| | |
| | |

16. நீங்கள் என்றாவது அல்லது ஏதேனுமொரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா?

(உரிய கூட்டில் ✓புள்ளி இடவும்) (ஆமெனில் விபரங்களை குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

……………………………………………………………………………………….

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

17. விண்ணப்பத்தாரியின் சான்றிதழ் :

அ. ஆட்சேர்ப்புக்கு ஏற்புடையதாக எல்லா விபரங்களையும் வாசித்து புரிந்துகொண்டேன் எனவும், இந்த விண்ணப்பபடிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். மேலும் இங்கு எல்லா பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி அல்லது பகுதிகளை பூர்த்தி செய்யாமல் மற்றும் /அல்லது பிழையாக பூர்த்தி செய்வதால் ஏற்படக்கூடிய நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகின்றேன்.

ஆ. என்னால் வெளிப்படுத்தியுள்ள இந்தக் கூற்று பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால், நியமனம் செய்வதற்கு முன்னர் தகைமையற்றவராக்கப்படுவதற்கும், நியமனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என நான் அறிவேன்.

இ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

(ஈ). ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான இறுதி தீர்மானம் நியமன அதிகாரிக்கு உரித்தாகும் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி : ........................................ ...........................................

விண்ணப்பத்தாரியின் ஒப்பம்

18. விண்ணப்பத்தாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்:-

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு……………………………………………..
என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ……………………………………………………ஆம் திகதி அவரின் கையொப்பம் இடப்பட்டதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………….

சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின்:

பெயர்:-…………………………………….

பதவி:-…………………………………….

முகவரி:-…………………………………..

திகதி:-…………………………………….

(தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும்.)

இந்த விண்ணப்பத்தாரியான திரு................................................ தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில் .................................................. ஆக நிரந்தர/தற்காலிக/அமய ஊழியராக சேவையாற்றுகின்றாரென குறிப்பிடுகின்றேன். ஏதேனும் ஒரு வகையில் அவர் இந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

.......................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

(பதவி முத்திரை)

சான்றுப்படுத்துபவரின்:

பெயர்:-..........................................

பதவி:-..........................................

முகவரி:-........................................

திகதி:-..........................................